# குருணாகல் பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குருணாகல் பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 216,407,657 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,010,654 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,427,594 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 3,223,380 தொகையான 5 நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கிக் கணக்கிலுள்ள ரூபா 38,775 பெறுமதியான 04 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசத்தைக் கட்டியெழுப்பும் நிதியத்திற்கு நன்கொடையளிப்பதற்காக சபை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட மற்றும் உறுப்பினர்களினால் நன்கொடையளிக்கப்பட்ட ரூபா 77,123 தொகைகளை அந்த நிதியத்திற்கு அனுப்பிவைக்காமல் 02 வருட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,809 | 1,782 | 2,018 |
| (ii) | வாடகை | 2,160 | 1,984 | 628 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,205 | 2,688 | 680 |
| (iv) | ஏனைய வருமானம் | 66,363 | 60,336 | 7,339 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 473,124 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 6,000,000 |

### 2.3.3 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 886,621 தொகையாக இருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(4) ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 66 ஆவது விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

5 கணக்கு விடயங்களின் கீழ் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,092,333 பெறுமதியான அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள் காணப்பட்டன.

### 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் காணிகள் கூறிடல்களின் கீழ் சபைக்கச் செலுத்த வேண்டிய 1% வரி செலுத்தும் வசதிக்காக 2003 திசெம்பர் 28 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 15(3) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வீட்டு ஆதன அபிவிருத்தி மற்றும் காணி கூறிட்டு விற்பனை செய்தல் தொடர்பான அறிக்கை என்பன 2011 ஆம் ஆண்டின் போது கூறுகளாக்கப்பட்ட 18 காணிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 04 காணிகளில் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் 1% ஆன வரித்தொகையில் ரூபா 606,251 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களின் விபரங்களின் பிரகாரம் சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட நூலகர் பதவிகளின் எண்ணிக்கை 3 ஆக இருந்த போதிலும் ஒரு பதவி ஆண்டில் வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட வீதித் தொழிலாளர் பதவிகளின் எண்ணிக்கை 25 ஆக இருந்த போதிலும் 18 நிரந்தர வீதித் தொழிலாளர்கள் மாத்திரம் இருந்ததுடன் அமைய அடிப்படையில் 10 பேர் சபையிலிருந்து சம்பளம் செலுத்தும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) தொழிலாளர், காவலாளி, சாரதி போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 44 ஆக இருந்ததுடன் உள்ளவாறாக அதன் கீழ் 37 தொழிலாளர்கள் மீளாய்வாண்டு வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் அந்த பதவிப் பெயர்களின் கீழ் சபை நிதியத்திலிருந்து சம்பளம் பெறுகின்ற 28 ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைய / நாட்கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,255,450 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபைக்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்